[2010 மே 14

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஈ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-29 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

95. சென்னை, உரிமையியல் நீதிபதி (முதுநிலைக் கோட்டம்) சிறு வழக்குகள் நீதிமன்றத்தின் இரண்டாம் நீதிபதி அவர்களை சென்னை, தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத்

2010 மே 14]

தீர்ப்பாயத்தின் (கூடுதல் நடுவர் ஆயம்) கூடுதல் உறுப்பினராக (நீதிமுறை) நியமித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (இ2) துறையின் 3-12-2009 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண். 242-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

96. 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (சிவில்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

97. 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வணிகம்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

98. 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (மாநில நிதி நிலை). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

99. 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

100. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதிக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

101. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதி ஒதுக்க கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

102. கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் நகர் அருள்மிகு விஸ்வேஸ்வரசாமி மற்றும் வீரராகவப் பெருமாள் திருக்கோயிலைச் சுற்றியிருந்த கட்டடங்களை 6-5-2000, 7-5-2000 மற்றும் 14-5-2000

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அன்று வருவாய்த் துறை, நெடுஞ்சாலைத் துறை, திருப்பூர் நகராட்சி அதிகாரிகள் மற்றும் திருக்கோயில் நிர்வாக அலுவலர் ஆகியோரால் இடித்து அகற்றப்பட்டதற்கான காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. எம்.ஏ. முருகேசன் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. *[1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்)*

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

243. மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

244. மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் (தேர்தல்கள்) துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

245. மானியக் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

246. மானியக் கோரிக்கை எண் 16-நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

247. மானியக் கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

248. மானியக் கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

249. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் "கணக்குகள் குறித்த ஒரு மேலோட்டப் பார்வை" என்கிற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS